முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1255

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

07.03.2023, செவ்வாய்கிழமை

1. ஞான வள்ளலே அரங்கா
ஞானிகள் பலம் கொண்ட தேசிகா
தான தர்மத்தின் சக்திகொண்டு
தரணியை மீட்பேன்என அவதரித்த குருராஜா
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் மாசி மாதம் 23 ம் நாள், 07.03.2023, செவ்வாய்கிழமை)
வரமென அரங்கன் சக்திகொண்டு
வையகத்தை மாற்ற உள்ள வடிவேலன் யானும்
3. அறத்தின் வழியாக அரங்கனுள் ஆக்கம் மிகுதி தந்து
அன்பர்களை கூட்டி இனிதே உலகமெல்லாம்
உலகமெல்லாம் தர்மமாக ஞானமாக
உயர்வான சன்மார்க்க நெறியுமாக
4. ஆகவே அற்புதம் நடத்திவர
அரங்கன் கொள்கை வழிதான் அகிலம் மாற்றம் பெறும்
வரங்கள் நாளும் நாளும் அரங்கனுக்கு
வடிவேலன் யான் வாரிவழங்கி ஆற்றலாய் இருந்துவர
5. வருகவே அரங்கமகான் தொடர்புகொண்ட
வையகத்து மாந்தர்கள் அனைத்துபேர்க்கும்
பெருமைபட இனி பிறவாபெரும் பேறு
பேராற்றல்பட மரணமில்லா பெருவாழ்வு
6. வாழ்வு கண்டு அரங்கன் தேடும் வண்ணம் ஞானியர்களாக
வையகத்தில் அளவில்லா ஞானியர்கள் படைகள்
வளர்ந்து தேசமெங்கும் ஞானவான் தலைமையாக
பிசகின்றி ஞான ஆட்சியாக மாற்றம் காணக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–